# கள்ளக்குறிச்சி நகராட்சி

## நகர் மன்ற சாதாரணக் கூட்டம்

**கூட்டம் எண்.05/2023** **நாள்.25.05.2023**

கள்ளக்குறிச்சி நகராட்சியின் நகர் மன்ற சாதாரணக் கூட்டம் எதிர்வரும் 29.05.2023 ஆம் தேதி திங்கள்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர் மன்ற தலைவர் தலைமையில், நகராட்சி நகர் மன்ற கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது. அச்சமயம் நகர் மன்ற துணை தலைவர் மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நகர் மன்ற தலைவர்
கள்ளக்குறிச்சி நகராட்சி

## கூட்டபொருள்கள்

பொருள் எண்.01

கள்ளக்குறிச்சி நகராட்சியின் அலுவலக பயன்பாட்டிற்கு தற்போது 3எண்ணிக்கை ஈப்பு வாகனங்கள் (TN 15 Y 6671, TN15 MC3299 மற்றும் TN15 MC3926) பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், மேற்படி ஈப்பு வாகனங்களின் மூலம், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களால் நடத்தப்படும் நேரடி ஆய்வு கூட்டங்களில் கலந்து கொள்ள வெளியூர்களுக்கு செல்ல வேண்டியிருப்பதால், வாகனங்களில் எவ்வித பழுதுகளும் இல்லாமல் சீராக இயக்குவதற்கு ஏற்ப பராமரிக்கப்பட வேண்டிள்ளது. மேற்படி மூன்று ஈப்பு வாகனங்களிலும் அவ்வப்போது ஏற்படும் பழுதுகள், காலமுறை பராமரிப்பு, ஆயில் சர்வீஸ், கிலோ மீட்டர் சர்வீஸ் உள்ளிட்ட இதர அனைத்து பழுதுகளையும் பழுது நீக்கம் செய்து பராமரிப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே, மேற்படி அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வரும் ஈப்பு வாகனங்களை பராமரிப்பு பணிகள் செய்வதற்கு மகேந்திரா& மஹேந்திரா நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற சர்வீஸ் நிறுவனத்தின் மூலமாக மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினமாக 2023-2024 ஆம் ஆண்டிற்கு ரூ.7,00,000/-(ரூபாய் ஏழ இலட்சம் மட்டும்)-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி வாகனங்களில் ஏற்படும் பழுதுகளை அகற்றுவதற்கு மஹேந்திரா & மஹேந்திரா கம்பெனியின் அங்கீகராம் பெற்ற நிறுவனத்தின் வழியே பழுது நீக்க பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பெறப்படும் பட்டியலின் அடிப்படையில் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 830 / 2022 / இ1)

பொருள் எண்.02

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில், நகராட்சிக்கு சொந்தமான 400-க்கும் மேற்பட்ட தெருமின் விளக்கு மின் இணைப்புகள் மற்றும் 300-க்கும் மேற்பட்ட சிறுமின் விசைப்பம்புகள் / விசைப்பம்புகள் உள்ளன. மேலும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் மூலம் இந்நகராட்சிக்கு தெருமின் விளக்கு, குடிநீர் விநியோகம் மற்றும் இதர பயன்பாட்டிற்கு பெறப்பட வேண்டிய புதிய மின் இணைப்புகள், கூடுதல் மின் பளு பெறுதல், சாலைகளின் நடுவே உள்ள மின் கம்பங்களை மாற்றி அமைத்தல் மற்றும் இதர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது. மேற்படி பணிகளை மேற்கொள்வதற்கு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் மூலம் பெறப்படும் கேட்பின் அடிப்படையில் தொகையினை செலுத்தப்படவேண்டியுள்ளது.

எனவே, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஆங்காங்கே தேவைப்படும் இடங்களில் புதிய தெருமின் விளக்கு, குடிநீர் விநியோகம் மற்றும் இதர பயன்பாட்டிற்கு பெறப்படும் மின் இணைப்புகள், கூடுதல் மின் பளு பெறுதல், சாலைகளின் நடுவே உள்ள மின் கம்பங்களை மாற்றுதல் மற்றும் இதர பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு 2023-2024 ஆம் ஆண்டிற்கு தேவைப்படும் தோராய செலவினத் தொகை ரூ. 5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் மூலம் அவ்வப்போது பெறப்படும் கேட்பு பட்டியலின் அடிப்படையில் தொகையினை செலுத்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. செலவின தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 580 / 2022 / இ1)**

பொருள் எண்.03

கள்ளக்குறிச்சி நகராட்சியில் செயல்படுத்தப்படும் திட்டப்பணிகள் நிர்வாக ரீதியாக செய்யப்படும் அறிவிப்புகள், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள், தொழில் மலர் விளம்பரங்கள் மற்றும் தமிழ்நாடு அரசின் சாதனை மலர் விளம்பரம் ஆகியவைகளை பிரசுரம் செய்வதற்கு 2023-2024ஆம் ஆண்டிற்கு தோராய செலவினம் ரூ.5,00,000/-(ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவின தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண்.04

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 01 முதல் 07 வரையில் 114-க்கும் மேற்பட்ட சிறுமின் விசைப்பம்புகள் உள்ளன. இதனை பொதுமக்கள் அன்றாட தேவைக்காக பயன்படுத்தி வருகின்றனர்.இதில் சில ஆழ்துளை கிணறுகளிலிருந்து தண்ணீர் குடிநீர் பகிர்மான குழாய்களுக்கு கொண்டு சென்று விநியோகம் செய்யப்படுகிறது. இந்த அமைப்பில் மோட்டார், குழாய்கள், பேனல் போர்டுகள், கன்டன்சர், பி.வி.சி. மேல் நிலை தொட்டிகள் மற்றும் இதர உபகரணங்கள் உள்ளன. இவற்றில் ஏதேனும் பகுதடைந்தால் இதனை உடனடியாக சரிசெய்யும் பணி மிகவும் அவசியமாகிறது.

நகராட்சி பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவதில் எவ்வித இடையூறும் இன்றி தண்ணீர் வழங்கிட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அவர்களால் அவ்வப்போது அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், இப்பணி நகராட்சியின் முக்கிய பணிகளில் ஒன்றாகவும் உள்ளது.

எனவே, மேற்கண்ட பணிகளில் உதிரி பாகங்களுடன் கூடிய பணிகள் செய்ய வேண்டியுள்ளது. எதிர்வரும் காலத்தில் ஏற்படும் வறட்சியினை எதிர்கொள்ள இப்பணிகளின் முக்கியத்துவத்தினை கருதி, பொதுமக்களுக்கு தங்கு, தடையின்றி குடிநீர் வழங்குவதற்கு 2023-2024 ஆம் ஆண்டிற்குதயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகைரூ.9,95,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரம் மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1124 / 2023 / இ1)**

பொருள் எண்.05

கள்ளக்குறிச்சி நகராட்சியில் எல்லைக்குட்பட்ட வார்டு எண்.10-ல் உள்ள எம்.ஆர்.என் நகர் பகுதியில் முதல் குறுக்கு தெருவில் மழைநீர் வடிகால் வசதியின்றி உள்ளதால் இச்சாலையில் மழைநீர் தேங்கியும் அப்பகுதியில் உள்ள வீடுகளில் இருந்த வெளியேறும் கழிவுநீர் செல்ல வழியில்லாமல் சாலையில் தேங்குகிறது. இதனால் இப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு சுகாதாரக்கேடு ஏற்பட வாய்ப்புள்ளது, எனவே இப்பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

எனவே, இப்பணிகள் மேற்கொள்ள ஏற்படும் தொகை ரூ.9,00,000/-(ரூபாய் ஒன்பது இலட்சம் மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1059 / 2023 / இ1)

பொருள் எண்.06

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 08 முதல் 14 வரை 89க்கும் மேற்பட்ட சிறுமின் விசைப்பம்புகள் உள்ளன. இதனை பொதுமக்கள் அன்றாட தேவைக்காக பயன்படுத்தி வருகின்றனர். இதில் சில ஆழ்துளை கிணறுகளிலிருந்து தண்ணீர் குடிநீர் பகிர்மான குழாய்களுக்கு கொண்டு சென்று விநியோகம் செய்யப்படுகிறது. இந்த அமைப்பில் மோட்டார், குழாய்கள், பேனல் போர்டுகள், கன்டன்சர், பி.வி.சி. மேல் தொட்டிகள் மற்றும் இதர உபகரணங்கள் உள்ளன. இவற்றில் ஏதேனும் பகுதடைந்தால் இதனை உடனடியாக சரிசெய்யும் பணி மிகவும் அவசியமாகிறது.

நகராட்சி குடிநீர் வழங்குவதில் எந்தவித இடையூறும் இன்றி தண்ணீர் வழங்க மண்டல இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களால் அவ்வப்போது அறிவுரை வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், இப்பணி நகராட்சியின் முக்கிய பணிகளில் ஒன்றாகவும் உள்ளது.

எனவே, மேற்கண்ட பணிகளில் உதிரி பாகங்களுடன் கூடிய பணிகள் செய்ய வேண்டியுள்ளது. எதிர்வரும் காலத்தில் ஏற்படும் வறட்சியினை எதிர்கொள்ள இப்பணிகளின் முக்கியத்துவத்தினை கருதி, பொதுமக்களுக்கு தங்கு, தடையின்றி குடிநீர் வழங்குவதற்கு 2023-2024 ஆம் ஆண்டிற்குதயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 9,95,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரம் மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1125 / 2023 / இ1)

பொருள் எண்.07

கள்ளக்குறிச்சி நகராட்சியில் எல்லைக்குட்பட்ட வார்டு எண்.02-ல் உள்ள வ.உ.சி நகர் முதல் தெரு முதல் ஆறாவது தெரு வரையில் சாலைகள் இணைப்புகள் இன்றி உள்ளது. இதன் ஒரு பகுதியில் ஒரு மீட்டர் அகலம் கொண்ட நடைபாதை முதல் தெரு முதல் 6வது தெரு வரையில் வீடுகளில் ஒட்டிய பகுதியில் அமைந்துள்ளது. எனவே இதனை C.C சாலை பாதையாக அமைக்கப்பட வேண்டியுள்ளது.

எனவே, இப்பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.3,00,000/- (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண்.08

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 15 முதல் 21 வரையில் 105-க்கும்மேற்பட்ட சிறுமின் விசைப்பம்புகள் உள்ளன. இதனை பொதுமக்கள் அன்றாட தேவைக்காக பயன்படுத்தி வருகின்றனர்.இதில் சில ஆழ்துளை கிணறுகளிலிருந்து தண்ணீர் குடிநீர் பகிர்மான குழாய்களுக்கு கொண்டு சென்று விநியோகம் செய்யப்படுகிறது. இந்த அமைப்பில் மோட்டார், குழாய்கள், பேனல் போர்டுகள், கன்டன்சர், பி.வி.சி. மேல் தொட்டிகள் மற்றும் இதர உபகரணங்கள் உள்ளன. இவற்றில் ஏதேனும் பகுதடைந்தால் இதனை உடனடியாக சரிசெய்யும் பணி மிகவும் அவசியமாகிறது.

நகராட்சி குடிநீர் வழங்குவதில் எந்தவித இடையூறும் இன்றி தண்ணீர் வழங்க மண்டல இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களால் அவ்வப்போது அறிவுரை வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், இப்பணி நகராட்சியின் முக்கிய பணிகளில் ஒன்றாகவும் உள்ளது.

எனவே, மேற்கண்ட பணிகளில் உதிரி பாகங்களுடன் கூடிய பணிகள் செய்ய வேண்டியுள்ளது. எதிர்வரும் கோடை காலத்தில் ஏற்படும் வறட்சியினை எதிர்கொள்ள இப்பணிகளின் முக்கியத்துவத்தினை கருதி, பொதுமக்களுக்கு தங்கு, தடையின்றி குடிநீர் வழங்குவதற்கு 2023-2024 ஆம் ஆண்டிற்குதயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகைரூ. 9,95,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரம் மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1126 / 2023 / இ1)**

பொருள் எண்.09

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள கடைகள் மற்றும் கட்டடங்கள் கட்டப்பட்டு இருபது ஆண்டுக்களுக்கு மேல் ஆகியுள்ளது. பேருந்து நிலைய வளாகப்பகுதியில் உள்ள கட்டடங்களின் RCC-மேற்கூரைகள் பழுதடைந்து அடிக்கடி சிறு பகுதிகளாக விழும் நிலையில் உள்ளது. இதனால் பேருந்து நிலையத்திற்கு வரும் பொதுமக்களுக்கும், அப்பகுதியில் வியபாரம் செய்யும் வியபாரிகளுக்கும் பாதிக்கப்படும் வகையில் உள்ளதால் அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் பழுதடைந்த மேற்கூரையினை சரிசெய்ய வேண்டியது அவசியமாகிறது.

எனவே, இப்பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1131 / 2023 / இ1)**

பொருள் எண்.10

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் கடிதம் ந.க.எண். 17404/2022/ எம்-1, நாள். 10.03.2023-ல் நகராட்சி பகுதியில் உள்ள அரசு தொடக்க, நடுநிலை மற்றும் உயர்நிலை பள்ளிகளில் வகுப்பு 1 முதல் 5 வரை பயிலும் மாணவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சரின் சிறப்பு திட்டமான காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தினை செயல்படுத்திட தெரிவிக்கப்பபட்டுள்ளது. அதனடிப்படையில் கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பத்து அரசு பள்ளிகளில் வகுப்பு 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும்916-எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தினை கள்ளக்குறிச்சி நகராட்சியின் வாயிலாக செயல்படுத்திட உள்ளது.

எனவே கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பத்து அரசு பள்ளிகளில் வகுப்பு 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் 916 எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் காலை சிற்றுண்டி வழங்குவதற்கு ஏதுவாக மேற்படி 916-மாணவர்களுக்கு தேவையான சில்வர் தட்டுகள், சில்வர் டம்ளர்கள் மற்றும் இதர தேவையான பொருட்கள் வாங்கப்பட வேண்டியுள்ளது, எனவே இப்பொருள்கள் கொள்முதல் செய்திட தயார் செய்யப்பட்டுள்ள தோரய மதிப்பீடு தொகை ரூ.1.50 (ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) இலட்சத்திக்கு மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று குறைந்த விலைப்புள்ளி வழங்கும் நிறுவனத்திடம் கொள்முதல் செய்துக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1128 / 2023 / இ1)**

பொருள் எண்.11

கள்ளக்குறிச்சி நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் இயங்கிவரும் வாகன எண்.TN15P3121 என்ற வாகனத்திற்கு தகுதி சான்று எதிர்வரும் 21.07.2023 அன்றுடன் முடிவடைவதால் வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை பழுதுநீக்கம் செய்ய உள்ளூர்/ வெளியூர் நிறுவனத்திடம் விலைப்புள்ளி கோரி பழுதுநீக்கம் செய்து, கள்ளக்குறிச்சி வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு சென்று தகுதி சான்று பெற ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3.பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1078 /2023/எச்1)**

பொருள் எண்.12

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 19, விஜயலட்சுமி நகர் பகுதியில் மழைநீர் வடிகால் இல்லாததால்,அப்பகுதியில் நகராட்சி வருவாய் நிதி 2022-2023ன் கீழ் ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சி நகர்மன்ற தீர்மானம் எண்,126, நாள்.23.05.2023-ல் அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு 05.07.2023-ல் திரு.N.செங்கோட்டையன், கள்ளக்குறிச்சி என்பவருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. தற்போது கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022-2023ன் கீழ் மண் சாலைகளை தார்சாலையாக மாற்றியமைக்கும் பணியில் விஜயலட்சுமி நகர் பகுதியில் மழைநீர் வடிகால் வசதியுடன் கூடி தார்சாலை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், 2022-2023ன் கீழ் வருவாய் நிதியில் மேற்கொள்ளப்பட இருந்த பணியினை 19-வது வார்டில் அதே பகுதியில் அமைக்கப்பட்டு வரும் சமுதாய கூடத்திற்கு கூடுதல் இதர வசதி பணிகள் மேற்கொள்ள பணியினை மாற்றி தர கோரி 19-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் கடிதம் வழங்கியுள்ளார்.

எனவே மேற்படி விஜயலட்சுமி நகர் பகுதியில் ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை மாற்றாக அதே பகுதியில் அமைக்கப்பட்ட வரும் சமுதாய கூடத்திற்கு கூடுதல் இதர வசதி பணிகளை அதே மதிப்பீட்டில் மேற்கொள்ளவும், பணி உத்திரவு வழங்கப்பட்ட அதே ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1130 / 2022 / இ1)**

பொருள் எண்.13

கள்ளக்குறிச்சி நகராட்சி அரசாணை (நிலை) எண்.57, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.02.05.2023ன் படி தற்போது தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. எனவே தேர்வு நிலை நகராட்சி நிலைக்கு ஏற்ப அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பணியிடம் தோற்றுவைக்கப்பட்டுள்ளதால், இந்நகராட்சிக்கு நியமனம் செய்யப்படும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அலுவலகப்பணிகள் மேற்கொள்ள தேவையான அறைகள் அமைத்தல், இணையதளம் வசதிகள் ஏற்படுத்துதல், தேவையான தடவள சாமான்கள் மற்றும் இதர வசதிகள் ஏற்படுத்தி தர வேண்டியுள்ளது.

எனவே, இப்பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.15,00,000/- (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1133 / 2023 / இ1**

பொருள் எண்.14

கள்ளக்குறிச்சி நகராட்சியில் எல்லைக்குட்பட்ட வார்டு எண்.02-ல் உள்ள வ.உ.சி நகர் முதல் தெருவின் 2வது குறுக்கு தெருவின் முடிவில் உள்ள நடைபாதை கேசவலு நகர் சாலையினை சென்று அடையும் வகையில் நடைபாதையாக உள்ளது. இதில் இருபுறமும் கால்வாய் மற்றும் ஒருபுறம் ஈ.பி மின் கம்பம் உள்ளது. இதனால் இவ்வழியை நடைபாதையாக பயன்படுத்தவதில் பொதுமக்களுக்கு மிகவும் சிரமமாக உள்ளது. மேற்படி வ.உ.சி நகர் முதல் தெருவில் உள்ள சாலை 7 குறுக்கு தெருக்களாக கொண்ட முக்கிய சாலையாகவும், இணைப்பு சாலைகள் இல்லாமலும் உள்ளது.

எனவே மேற்படி பகுதியினை ஆய்வு செய்த நகர்மன்ற தலைவர் மற்றும் நகராட்சி ஆணையர்கள் ஆகியோர் மேற்படி பகுதியில் நடைபாதை போக்குவரத்திற்கு இடையூராக உள்ள மின் கம்பத்தினை சாலையின் ஓரத்தில் இடையூ இன்றி மாற்றியமைத்து, பாதையினை அகலப்படுத்தியும் பொதுமக்களுக்கும் நடைபாதையாக மாற்றியமைக்க அறிவுறுத்தினர். மேற்படி பகுதியில் உள்ள சாலையினை அகலப்படுத்தி கால்வாயினை இணைத்து சிறுபாலம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

எனவே, இப்பணிகள் மேற்கொள்ள ஏற்படும் தொகை ரூ.1,80,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1129 / 2023 / இ1)**

பொருள் எண்.15

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு வார்டு எண்.16-ல் உள்ள பாரதிபள்ளியின் பின் புறம் முதல் கிருஷ்ணா நகர் சாலை வரையில் உள்ள மழைநீர் கால்வாய் கடந்த காலங்களில் பெய்த மழைநீர் காரணமாக மநீர் செல்லும் வாய்காலில் மண்நிரம்பி உள்ளது. இதனால் மழைநீர் சீராக செல்ல வழியில்லாமல் தேங்கி நிற்கிறது. மேலும் தற்போது கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022-2023ன் கீழ் அருகில் உள்ள கிருஷ்ணா நகர் சாலையில் சிறுபாலம் அமைக்கப்பட்டுள்ளது. எனவே எதிர் வரும் மழைக்காலத்தில் இக்கால்வாயில் மழைநீர் தங்கு தடையின்றி செல்லவும் அருகில் உள்ள குடியிருப்புகளில் மழைநீர் செல்லாமல் தடுக்கும் வகையிலும் இக்கால்வாயினை தூர்வாரி சமன் செய்ய வேண்டியுள்ளது. எனவே இவ்விடத்தினை JCB இயந்திரம் மூலம் கால்வாயினை தூர்வாரி சமன்படுத்தி கரைபகுதிகளை பலப்படுத்தும் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே, இப்பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1132 / 2023 / இ1)**

பொருள் எண்.16

கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலக கட்டடத்தின் தெற்கு பகுதியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வந்ததது. தற்போது ஆரம்ப சுகாதார நிலையம் கச்சிராயபாளையம் சாலையில் உள்ள அரசு பொதுமருத்துவனை கட்டிடத்திற்கு மாற்றம் செய்து செயல்பட்டு வருகிறது.அதனால் ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வந்த கட்டிடம் தற்போது காலியாக உள்ளது. மேலும் கள்ளக்குறிச்சி நகராட்சி தற்போது தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதால் இந்நகராட்சிக்கு கூடுதல் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட உள்ளதால் தற்போது தெற்கு பகுதியில் காலியாக உள்ள அறையினை பொது சுகாதார பிரிவாக மாற்றம் செய்து செயல்படும் விதமாக அமைக்கப்பட வேண்டியுள்ளது. எனவே இவ்விடத்தில் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அறைகளாக முறையாக தடுக்கவும் Electrical, Plumming மற்றும் Internet வசதிகள் செய்யப்பட வேண்டியுள்ளது.

எனவே, இப்பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.3,50,000/- (ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1134 / 2023 / இ1)**

பொருள் எண்.17

இயக்குநர் தேசிய சுகாதார இயக்கம், தமிழ்நாடு சென்னை,-6, அவர்களின் செயல்முறை உத்தரவில் ந.க.எண்6218/P6/NHM/19, நாள்.11.05.2023-ல் தமிழ்நாடு அரசின் சுகாதார துறை அமைச்சர் அவர்கள் 2023-2024ன் சட்டமன்ற கோரிக்கை அறிவிப்பு எண்.19 மற்றும் 59-ல் மாவட்ட இடையீட்டு மையம் அருகில் ஐந்து மாவட்டங்களில் "ஒருங்கிணைந்த உணர்வு திறன் பூங்கா" ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை கள்ளக்குறிச்சியில் "ஒருங்கிணைந்த உணர்வு திறன் பூங்கா" ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்து கள்ளக்குறிச்சி நகராட்சி (உள்ளாட்சி அமைப்பு) மூலம் பணிகள் மேற்கொள்ள உத்திரவிடப்பட்டுள்ளது.

எனவே கள்ளக்குறிச்சி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் "ஒருங்கிணைந்த உணர்வு திறன் பூங்கா" ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் திட்டப்பணிக்கான செலவு தொகையினை தேசிய சுகாதார இயக்கம் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண்.18

கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் தலைமையில் 28.12.2022-ல் நடைபெற்ற தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுடனான 4வது காலண்டிற்கான ஆலோசனைக் கூட்டத்தில் கள்ளக்குறிச்சி காய்கறி அங்காடியில் குடிநீர் வசதி ஏற்படுத்தி தர கோரி மக்கள் உரிமை மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு சங்கம், கள்ளக்குறிச்சி மூலம் கோரிக்கை வைக்கப்பட்டதை உரிய ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் நகராட்சிக்கு சொந்தமான நாளங்கடியில் காய்கறி மார்கெட் பகுதியில் இடம் ஆய்வு செய்யப்பட்டது. இப்பகுதியில் 265 கடைகள் மற்றும் தினசரி 700க்கும் மேற்பட்ட பொதுமக்கள் வந்து செல்லும் முக்கிய பகுதியாக உள்ளது. எனவே நகராட்சி மார்கெட் வளாக பகுதியில் குடிநீர் விநியோகத்திற்கு இரண்டு இடங்களில் இரண்டு மின் மோட்டர்கள் அமைக்கவும், குடிநீர் தொட்டிகள் Pvc டேங்குகள் அமைக்கவும், குடிநீர் பிடிக்கும் இடத்தில் Tiles அமைக்கும் பணிகள் மேற்கொள்ளபட வேண்டியள்ளது.

எனவே, இப்பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.2,60,000/- (ரூபாய் இரண்டு இலட்சத்து ஆறுபதாயிரம் மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 323 / 2023 / இ1)**

பொருள் எண்.19

கள்ளக்குறிச்சி நகராட்சியில், 15வது நிதிக்குழு மான்ய திட்டம் (15th CFC - Tied Grant) 2022-2023ன் கீழ், கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு 12.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1. | கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்குண்டான LCV வாகனம் 2 எண்ணிக்கை கொள்முதல் | ரூ. 14,60,000/- | ASR Body works Madurai | 0.00% மதிப்பீட்டு தொகைக்கு |
| | | | ABT Industries Coimbotore | 2.05% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
3. பட்டியல்படி தொகையினை திட்டநிதியில் வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 537 / 2023 / இ1)**

பொருள் எண்.20

கள்ளக்குறிச்சி நகராட்சியில், 15வது நிதிக்குழு மான்ய திட்டம்(15th CFC - UnTied Grant) 2022-2023ன் கீழ், கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு 12.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1. | பள்ளிக்கூடத் தெருவில் (042020R561) தார்சாலை அமைத்தல் | ரூ. 13,20,000/- | திரு. A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி | 0.01% மதிப்பீட்டு தொகைக்கும் குறைவு |
| | | | திரு. J.மகேஷ்வரன், கள்ளக்குறிச்சி | 3.56% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 2. | ஏமப்பேர் காட்டுக்கொட்டகை பிரதான தெருவில் (042019R013) தார்சாலை அமைத்தல் | ரூ. 30,40,000/- | திரு. A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி | 0.01% மதிப்பீட்டு தொகைக்கும் குறைவு |
| | | | திரு. J.மகேஷ்வரன், கள்ளக்குறிச்சி | 4.14% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 3. | ராமச்சந்திரா நகர்4வது (042021R243), 5வது (042021R1244) மற்றும் 7வது தெருவில் (042021R246) தார்சாலை அமைத்தல் | ரூ. 4.90.000/- | திரு. A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி | 0.02% மதிப்பீட்டு தொகைக்கும் குறைவு |
| | | | திரு. J.மகேஷ்வரன், கள்ளக்குறிச்சி | 2.83% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 4. | ராமச்சந்திரா நகர் 6வது தெருவில் (042021R245) தார்சாலை அமைத்தல் | ரூ. 10.50.000/- | திரு. A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி | 0.01% மதிப்பீட்டு தொகைக்கும் குறைவு |
| | | | திரு. J.மகேஷ்வரன், கள்ளக்குறிச்சி | 3.56% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
3. பட்டியல்படி தொகையினை திட்டநிதியில் வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 537 / 2023 / இ1)

பொருள் எண்.21

கள்ளக்குறிச்சி நகராட்சியில், நமக்கு நாமே திட்டம் (NNT) 2022-2023ன் கீழ், கீழ்க்காணும் பணிக்கு (பொதுமக்கள் பங்கு தொகை ரூ. 1.50 இலட்சம் மற்றும் அரசு மானியம் யரூ. 3.00 இலட்சம் ஆக மொத்தம் ரூ. 4.50 இலட்சம்) மேற்கொள்வதற்கு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண். 8880-2/2022/P1, நாள். 06.03.2023ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 21.03.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1. | துருகம் சாலை மயானத்திற்கு நுழைவு வாயில் அமைத்தல் பணி | ரூ. 4,50,000 | திரு. A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி | 0.05% மதிப்பீட்டு தொகைக்கும் குறைவு |
| | | | திரு. J.மகேஷ்வரன், கள்ளக்குறிச்சி | 4.50% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.05%குறைவான ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு. A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று, திட்டப்பணியின் அவசர, அவசியத்தினை கருதியும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கானொலிகாட்சி ஆய்வு கூட்ட அறிவுரைக்கிணங்கவும், மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணிகள் முடிக்கப்பட்ட பின் பட்டியல் படி தொகையினை திட்டநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3252 / 2022 / இ1)**

பொருள் எண்.22

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட சேலம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான குளக்கரை கடைகள் எண் 8,9ஐ குத்தகைக்கு எடுத்து நடத்திவரும் திரு என்.மணிவண்ணன் என்பவர், குளக்கரை கடைகளுக்கு அருகில் உள்ள நான்குமுனை சந்திப்பில் போக்குவரத்து விளக்கு சகிம்சை (TRAFFIC SIGNAL) அமைக்கப்பட்டுள்ளதாகவும், விளக்கு சகிம்சை இயங்கும் சமயம் அனைத்து வாகனங்களும் குளக்கரை கடைகளுக்கு முன்புறம் நிற்பதாலும், நகராட்சிக்கு சொந்தமான நாளங்காடிக்கு வந்து செல்லும் பொது மக்கள் தங்களது இருசக்கர வாகனங்களை குளக்கரை கடைகளுக்கு முன்புறம் நிறுத்திவிட்டு செல்வதால், கடைகளுக்கு வாடிக்கையாளர்கள் வருவதில் சிரமம் ஏற்படுவதாகவும், இதனால் வியாபாரம் சரிவர இல்லை எனவும், கடை எண் 08ன் பக்க சுவரினை அகற்றி தான் குத்தகைக்கு எடுத்து நடத்தி வரும் கடைக்கு இருபக்க வியாபாரம் செய்யும் நோக்கில் அனுமதி கோரியுள்ளார். மேலும், கடையினை ஒப்படைக்கும்போது அகற்றப்பட்ட சுவரினை தனது சொந்த செலவில் அமைத்து தரவும், நகராட்சியின் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடப்பதாகவும் அவர் தனது விண்ணப்பத்தில் உறுதி அளித்துள்ளார்.

எனவே, நகராட்சிக்கு சொந்தமான குளக்கரை கடை எண் 08ன்பக்க சுவரினை அகற்ற அனுமதி கோரி வரப்பெற்ற விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:-</u>

1. விண்ணப்பத்தினை பார்வையிட்டு விண்ணப்பதாரர் கோரிய கோரிக்கையினை பரிசீலனை செய்து மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.கஎண் 992/2023/அ1)

பொருள் எண்.23

கள்ளக்குறிச்சி நகராட்சியில், குடிநீர் நிதி 2023-2024ன் கீழ், கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு 11.05.2023-ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | காசிம் சாகிப் கொல்லைத் தெரு மற்றும் செக்கு மேட்டுத் தெருவில் அமைந்துள்ள ஆழ்துளை கிணறுகளில் புதிய மின் மோட்டார் பொருத்தி, குடிநீர் குழாய் அமைத்தல் (வார்டு எண். 11) | ரூ. 2,75,000 | திரு. N.செங்கோட்டையன், கள்ளக்குறிச்சி | 0.10% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு. M.மோகன், கள்ளக்குறிச்சி | 3.55% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 2. | கள்ளக்குறிச்சி நகராட்சி 21 வார்டுகளில் குடிநீர் பகிர்மான குழாய்கள் இன்றி உள்ள பகுதிகளில் 3" PVC குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைத்தல் | ரூ. 9,50,000 | திரு. N.செங்கோட்டையன், கள்ளக்குறிச்சி | 0.15% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு. M.மோகன், கள்ளக்குறிச்சி | 2.73% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 3. | எம்.ஜி.ஆர் நகர் முதல் கா.மாமனந்தல் காலணி வரை குடிநீர் விநியோக குழாய்கள் அமைத்தல் (வார்டு எண். 04) | ரூ. 75,000 | திரு. A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி | 0.15% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. சக்தி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 1.80% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 4. | கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.08,12,16, மற்றும் 18 ஆகிய இடங்களில் உள்ள தெருக்களில்புதியதாக UPVC குழாய்கள் சாலையின் ஓரத்தில், ஒரு அடி ஆழத்தில் அமைத்து கான்கீரிட் அமைத்தல் | ரூ. 4,00,000 | M/s. சக்தி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 0.15% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு. A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி | 1.03% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 5. | பழுதடைந்த நிலையில் உள்ள சின்டெக்ஸ் தொட்டிகளை Sintex Welding செய்தல் | ரூ. 1,00,000 | திரு. A.சின்னதுரை, கள்ளக்குறிச்சி | 0.05% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு. N.செங்கோட்டையன், கள்ளக்குறிச்சி | 2.11% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 6. | கருணாபுரம் காலணியில் நகராட்சி கிணற்றின் பின்புறம் பகுதியில் உள்ள வடக்கு தெருவில் குடிநீர் பிரதான குழாய்கள் அமைத்தல். (வார்டு எண். 08) | ரூ. 3,00,000 | திருமதி. M.செல்லம்மாள், கள்ளக்குறிச்சி | 0.10% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு. A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி | 3.55% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 7. | விஜியலட்சுமி நகர் பிரதான சாலை பகுதியில் குடிநீர் பகிர்மானக் குழாய்கள் அமைத்து குடிநீர் விநியோகம் வசதிகள் ஏற்படுத்துதல் (வார்டு எண். 19) | ரூ. 5,00,000 | திரு. N.செங்கோட்டையன், கள்ளக்குறிச்சி | 0.15% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு. M.மோகன், கள்ளக்குறிச்சி | 2.73% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 8. | விளபந்தாங்கல் சாலை நந்தினி ஆயில் மில் பின்புறம் உள்ள பகுதியில் குடிநீர் விநியோக குழாய்கள் அமைத்து அருகில் உள்ள சிறுமின் விசைப்பம்புகளில் (M.P.P) இருந்து Upvc குழாய்கள் பொருத்தி குடிநீர் விநியோகம் வசதிகள் செய்தல். (வார்டு எண்.14) | ரூ. 2,50,000 | திரு. J.முஸ்தபா, கள்ளக்குறிச்சி | 0.25% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. சக்தி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 2.18% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 9. | கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 13,14,17 மற்றும் 20 ஆகிய இடங்களில் உள்ள தெருக்களுக்கு அருகில் உள்ள சிறுமின் விசைப்பம்புகளில் (M.P.P) இருந்து Upvc குழாய்கள் அமைத்தல் | ரூ. 5,00,000 | திருமதி. M.சரோஜா, கள்ளக்குறிச்சி | 0.18% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. சக்தி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 2.08% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
3. பட்டியல்படி தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2580 / 2022/ இ1)

பொருள் எண்.24

கள்ளக்குறிச்சி நகராட்சிக்குட்பட்ட திரு.கோபாலகிருஷ்ணன் த/பெ கண்ணன் என்பவர் கள்ளக்குறிச்சி நகரப்பகுதியில் அவருக்கு சொந்தமான இடத்தினை பிரிதிவாதிகளான 1 முதல் 5 வரை உள்ளவர்கள் பெயருக்கு வீட்டு வரி ரசீது மற்றும் குடிநீர் கட்டண ரசீது பெயர் மாற்றம் செய்யக்கூடாது என மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் கள்ளக்குறிச்சி வழக்கு எண்.466/2022 ல் வழக்கு தொடர்ந்துள்ளார்.

மேற்படி வழக்கில் இந்நகராட்சி சார்பாக அரசு வழக்கறிஞர், அவர்கள் ஆஜராகி வழக்கினை தொடர்ந்து நடத்திடவும், எதிர்வாதுரை தாக்கல் செய்து வழக்கினை முடிவுக்கு கொண்டு வர வழக்கு கட்டணம் ரூ.5,000/- ஐ வழங்கிட மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி வழக்கறிஞர் கட்டணத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 45/2023/எப்1)**

பொருள் எண்.25

கள்ளக்குறிச்சி நகராட்சியில், வருவாய் நிதி 2022-2023ன் கீழ், கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு 11.05.2023-ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | விளாந்தாங்கல் சாலை குறுக்கு தெருவில் புதிய சிறுபாலம் அமைத்தல் (வார்டு எண். 14) | ரூ. 1,10,000 | M/s. சக்தி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 0.12% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு. A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி | 1.50% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 2. | துருகம் சாலை நுண் உர மையத்தில் (MCC) Conveyer Belt அமைக்கப்பட்டுள்ள இடத்தில் புதியதாக இரும்பு ஷெட் மற்றும் பேவர்பிளாக் தளம் அமைக்கும் பணி மேற்கொள்ளுதல் | ரூ. 7,00,000 | திரு. A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி | 0.10% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. சக்தி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 2.84% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 3. | கருணாபுரம் புதுக்காலனி 1வது தெரு, 3-வது தெரு மற்றும் ஜோகியர் தெரு பிரதான சாலை ஆகியபகுதிகளில் சந்திப்பு பகுதிகளில் சிறுபாலங்கள் அமைத்தல் (வார்டு எண். 09) | ரூ. 3,00,000 | திரு.P.நடராஜன் கள்ளக்குறிச்சி | 0.10% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு.R.ராஜன்பாபு கள்ளக்குறிச்சி | 3.55% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 4. | ஏமப்பேர் குளத்தின் நடைபாதை பகுதியினை மண் நிரப்பி தடுப்பு சுவர் மற்றும் சிறுபாலம் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ. 9,50,000 | திரு. A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி | 0.11% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. சக்தி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 3.81% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 5. | ஏமப்பேர் குளத்தில் நடைபாதை பகுதியில் மண் நிரப்பி பணிகள் செய்ய Gravel Filling செய்தல் | ரூ. 8,80,000 | திரு. A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி | 0.15% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. சக்தி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 1.80% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 6. | கருணாபுரம் புதிய காலணியில் உள்ள சமுதாய கூடத்தில் சமையற்கூடத்தை பழுதுகள் நீக்கி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ. 3,00,000 | திரு.R.ராஜன்பாபு கள்ளக்குறிச்சி | 0.15% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு.P.நடராஜன் கள்ளக்குறிச்சி | 1.03% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 7. | வ.உ.சி நகர் 1வது பிரதான சாலையில் உள்ள சேதமடைந்த நகராட்சி பெரிய கிணற்றில் மண் நிரப்புதல் மற்றும் மின்கம்பம் அடித்தளம் அமைத்தல் (வார்டு எண்,02) | ரூ. 8,00,000 | திரு. A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி | 0.05% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. சக்தி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 2.11% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 8. | கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலகத்தில் உள்ள அனைத்து பிரிவுகளுக்கும் தேவையான கணினிகள், பிரிண்டர்,கணினி மானிட்டர்கள் கொள்முதல் செய்தல். | ரூ. 9,90,000 | M/s. Adhav Solutions, Villupuram | 0.10% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. A.T.S. Syatems, Villupuram | 3.10% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 9. | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டு பகுதிகளில் சேதமடைந்த சிமெண்ட் சாலைகளை தற்காலிகமாக சீரமைப்பு பணிகள் (Patch Work) மேற்கொள்ளுதல் | ரூ. 9,90,000 | திரு. J.முஸ்தபா, கள்ளக்குறிச்சி | 0.15% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. சக்தி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 2.15% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 10. | சிறிய ரக 3D Excavator வாகனம் ஏற்றி இறக்க இரும்பு சாய்தளம் (Iron Ramp) அமைத்தல். | ரூ. 60,000 | திருமதி. M.செல்லம்மாள், கள்ளக்குறிச்சி | 0.15% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு. A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி | 1.55% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 11. | ஸ்டார் சிட்டி & KAG நகர் பகுதிகளில் சிறுபாலம் மற்றும் ராஜாஜி நகரில் மழைநீர் வடிகால் அமைத்தல் (வார்டு எண். 13) | ரூ. 3,00,000 | M/s. சக்தி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 0.12% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு. A.K.இளையாழ்வார், கள்ளக்குறிச்சி | 1.71% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
3. பட்டியல்படி தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2816 / 2022/ இ1)**

பொருள் எண்.26

கள்ளக்குறிச்சி நகராட்சிக்குட்பட்ட திரு.கோவிந்தசாமி த/பெ சடையகவுண்டர் என்பவர் கள்ளக்குறிச்சி கிராம புல எண்.369/2 -ல் சந்து என வகைபாடு செய்யப்பட்ட இடத்தினை அனுபவித்து வருவதை தடை செய்யாமல் இருக்க தடைஉத்திரவு பிறப்பிக்க கோரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கள்ளக்குறிச்சி வழக்கு எண்.55/2023 ல் வழக்கு தொடர்ந்துள்ளார்.

மேற்படி வழக்கில் இந்நகராட்சி சார்பாக அரசு வழக்கறிஞர், அவர்கள் ஆஜராகி வழக்கினை தொடர்ந்து நடத்திடவும், எதிர்வாதுரை தாக்கல் செய்து வழக்கினை முடிவுக்கு கொண்டு வர வழக்கு கட்டணம் ரூ.5,000/- ஐ வழங்கிட மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி வழக்கறிஞர் கட்டணத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 996/2023/எப்1)**

பொருள் எண்.27

கள்ளக்குறிச்சி நகராட்சியில், வருவாய் நிதி (General Fund)-ன் கீழ், கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண். 33553/2022/EA2-SWM-18, நாள். 10.01.2023ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை-28 அவர்களின் கடிதம் ந.க.எண். 001/2022/DO1, நாள். 03.02.2023ல் ஒப்பந்தப்புள்ளி தெளிவுரை பெறப்பட்டு, அதனடிப்படையில், 27.03.2023 அன்று மின்னனு (E-Tendering) முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், மின்னனு முறையில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | கள்ளக்குறிச்சி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு சேவை வழங்குநர் / முகவர் / ஒப்பந்ததாரர் தேர்வு செய்திட வெளிக்கொணர்வு முகமை (Out Sourcing) மூலம் பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ. 3,90,92,000 | M/s. GREEN WARRIOR, No. 14, K.K. Nagar, 4th Street,Thiruvallur-602002 | ரூ. 4649.00 / ஒரு டன் (-) 2.027% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. CITY CLEAN, 7th Floor, Spencer Plaza Mall, No. 714A, Phase Anna Salai, Thousand Lights,Chennai-631209 | ரூ. 4745.00 / ஒரு டன் (-) 0.004% மதிப்பீட்டிற்கும் குறைவு |

